பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

02 11 2024 6 45

சனிக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. தீபாவளி பண்டிகையை ஒட்டி நாடு முழுவதும் 7 ஆயிரத்து 435 சிறப்பு ரயில்கள் இயக்கப்பட்டதாக ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

2. நாடு முழுவதும் 14 ஆயிரத்து 500 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு விவசாய நோக்கத்திற்கான ட்ரோன்களை வழங்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

3. தீபாவளி பண்டிக்கைகாக சொந்த ஊர் சென்றவர்கள் சென்னை திரும்ப ஏதுவாக இன்று முதல் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்டும் என்று விரைவுப் போக்குவரத்துக் கழகம் அறிவித்துள்ளது.

4. நீலகிரி, கோவை, திருப்பூர் உள்ளிட்ட 19 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஹைலோ ஓபன் பேட்மிட்டன் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு அரை இறுதியில் இந்தியாவின் மாளவிகா பன்சோட் இன்று டென்மார்க்கின் **Julie Davall**-ஐ எதிர்கொள்கிறார்.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

தீபாவளி பண்டிகையை ஒட்டி நாடு முழுவதும் 7 ஆயிரத்து 435 சிறப்பு ரயில்கள் இயக்கப்பட்டதாகவும், தேவைப்பட்டால் கூடுதலாக 150 ரயில்கள் இயக்கப்படும் என்றும் ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லி ரயில் நிலையத்தில் நேற்று சிறப்பு ரயில்கள் இயக்கம் தொடர்பாக ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

கடந்த மாதம் 31ஆம் தேதி வரை நாடு முழுவதும் சிறப்பு ரயில்களில் 51 லட்சம் பேர் பயணித்துள்ளதாகக் கூறினார்.

தீபாவளி பண்டிகையை கொண்டாட சொந்த ஊர் சென்றவர்கள் திரும்பிவர ஏதுவாக சிறப்பு ரயில்களுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு 4 ஆயிரத்து 500 சிறப்பு ரயில்கள் இயக்கப்பட்டதாகவும், இந்த ஆண்டு கூடுதலாக 3 ஆயிரம் ரயில்கள் இயக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

ரயில் பயணிகள் பாதுகாப்பாக பயணம் செய்ய அனைத்து ஏற்பாடுகளையும் செய்த ரயில்வே ஊழியர்கள், ரயில்வே பாதுகாப்புப் படையினர் மற்றும் காவல்துறையின் பணியை அவர் பாராட்டினார்.

<<<<>>>>

தீபாவளி பண்டிக்கைகாக சொந்த ஊர் சென்றவர்கள் சென்னை திரும்ப ஏதுவாக இன்று முதல் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்டும் என்று விரைவுப் போக்குவரத்துக் கழகம் அறிவித்துள்ளது.

நாளை மறுநாள் வரை மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து சென்னைக்கு நாள்தோறும் இயக்கக்கூடிய 2 ஆயிரத்து 92 பேருந்துகளுடன் மூவாயிரத்து 165 சிறப்புப் பேருந்துகளும், பிற ஊர்களில் இருந்து 3 ஆயிரத்து 405 பேருந்துகள் என 12 ஆயிரத்து 846 பேருந்துகள் இயக்கப்படும் என்று விரைவுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் திரு. ஆர். மோகன் தெரிவித்துள்ளார்.

பயணிகள் கடைசி நேர கூட்ட நெரிசலில் பயணிப்பதை தவிர்த்து தங்கள் பயணத்தை முன்கூட்டியே திட்டமிட்டு காலியாக உள்ள இருக்கைகளில் முன்பதிவு செய்து பயணிக்குமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

வெளியூர்களில் இருந்து பேருந்துகள் மூலம் கிளாம்பாக்கம் வந்தடையும் பயணிகளின் வசதிக்காக நாளை மறுநாள் காட்டாங்குளத்தூர் - தாம்பரம் இடையே சிறப்பு மின்சார ரயில்கள் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

பொத்தேரி ரயில் நிலையத்தில் இந்த ரயில்கள் கூடுதல் நேரம் நின்று செல்லும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே ராமநாதபுரத்தில் இருந்து சென்னைக்கு நாளை சிறப்பு ரயில் இயக்கப்பட உள்ளது.

இந்த ரயில் ராமநாதபுரத்தில் இருந்து மாலை 3 மணிக்கு புறப்பட்டு இரவு மணி 11.40க்கு சென்னை தாம்பரம் வந்தடையும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

<<<<>>>>

நாடு முழுவதும் 14 ஆயிரத்து 500 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு விவசாய நோக்கத்திற்கான ட்ரோன்களை வழங்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

'நமோ ட்ரோன் சகோதரி' திட்டத்தின்கீழ் மகளிர் அதிகாரம் பெறும் வகையில் பூச்சிக்கொல்லி மருந்து தெளிக்கவும், உரமிடவும் இந்த ட்ரோன்கள் பயன்படுத்தப்படும்.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் இந்த ட்ரோன்கள் மற்றும் அதன் துணைக் கருவிகளை வாங்குவதற்கு 80 சதவீதம் வரை, அதிகபட்சம் 8 லட்சம் ரூபாய் வரை நிதியுதவி வழங்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ள இத்திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய வேளாண் உள்கட்டமைப்பு நிதித் திட்டத்தின்கீழ் கடனாக பெற்றும் ட்ரோன்களை வாங்க முடியும் என்றும், இதற்கு 3 சதவீத வட்டி மானியமாக வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ட்ரோன்களைப் பயன்படுத்த மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு 15 நாள் பயிற்சி அளிக்கப்படும் என்றும் மத்திய அரசு கூறியுள்ளது.

<<<<>>>>

காங்கிரஸ் ஆளும் கர்நாடகா, தெலங்கான உள்ளிட்ட மாநிலங்களில் மக்களுக்கு அளித்த தேர்தல் வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டு வருவதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. கே.சி. வேணுகோபால் கூறியுள்ளார்.

நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை காங்கிரஸ் கட்சி அறிவித்துவிட்டு ஆட்சிக்கு வந்தவுடன் நிதி நெருக்கடியில் சிக்கித் தவிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்த குற்றச்சாட்டுக்கு பதிலளித்த அவர், கர்நாடகாவில் மாநில அரசு தேர்தல் கால வாக்குறுதிகளை அமல்படுத்தியுள்ளதாக கூறினார்.

கர்நாடகாவில் தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்ற காங்கிரஸ் அரசு 56 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளதாக அம்மாநில மூத்த அமைச்சர் திரு. ஜி. பரமேஸ்வரா தெரிவித்துள்ளார்.

ஹிமாச்சலப்பிரதேச மாநிலத்தில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளில் 10-ல் 5 வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு. சுக்விந்தர் சிங் சாகு கூறியுள்ளார்.

<<<<>>>>

பாதுகாப்புத்துறை ஓய்வூதியம் பெறுவோர் டிஜிட்டல் உயிர்வாழ் சான்றிதழ் பெற சென்னையில் சிறப்பு முகாமுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து பாதுகாப்புத்துறை கணக்கு கட்டுப்பாட்டு அதிகாரி திரு. ஜெயசீலன் எமது செய்தியாளரிடம் பேசினார்.

<<<<>>>>

முருகப் பெருமானின் அறுபடை வீடுகளில் ஒன்றான திருச்செந்தூரில் கந்தசஷ்டி திருவிழா இன்று யாகசாலை பூஜையுடன் தொடங்கியது.

அதிகாலை நடை திறக்கப்பட்டு முருகப்பெருமானுக்கு சிறப்பு அபிஷேகங்கள் நடத்தப்பட்டது.

விழாவின் முக்கிய நிகழ்ச்சியான சூரசம்ஹாரம் வரும் 7ஆம் தேதி நடைபெற உள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் அனேக இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நீலகிரி, கோவை, திருப்பூர், ஈரோடு, மதுரை, விருதுநகர், தேனி, திண்டுக்கல், தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி, ராமநாதபுரம், சிவகங்கை, கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல், கரூர் ஆகிய 19 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே மேற்குத்தொடர்ச்சி மலைப் பகுதியில் நேற்று வெள்ளப்பெருக்கில் சிக்கிக்கொண்ட 150க்கும் மேற்பட்டோரை தீயணைப்புத் துறையினர் பத்திரமாக மீட்டனர்.

அங்குள்ள மம்சாபுரம் பேரூராட்சிக்கு உட்பட்ட ராக்காச்சி அம்மன் கோவிலுக்குச் சென்றபோது தொடர்மழை காரணமாக நீரோடையில் தண்ணீர் அதிகரித்ததால் இவர்கள் சிக்கிக்கொண்டனர்.

தென்காசி மாவட்டம் குற்றால அருவிகளில் நேற்று ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கை அடுத்து அருவிகளில் சுற்றுலாப் பயணிகள் குளிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

விடுமுறை நாளான நேற்று ஏராளமான சுற்றுலாப் பயணிகள் அங்கு திரண்டிருந்தபோதும், பாதுகாப்பு கருதி குளிப்பதற்கு தடை விதிக்கப்பட்டதால் சுற்றுலாப் பயணிகள் ஏமாற்றமடைந்தனர்.

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகேயுள்ள கும்பரைக்கரை அருவியிலும் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் சுற்றுலாப் பயணிகள் குளிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்தகள்*

போரினால் பாதிக்கப்பட்டுள்ள காஸாவில் பொதுமக்களுக்கான அடிப்படை வசதிகளுக்கும், உயிர்காக்கும் மருந்துகளுக்கும் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

-----------

யுக்ரைனுக்கு ஆயுதங்கள் உட்பட 425 மில்லியன் டாலர்கள் ராணுவ உதவியை வழங்க உள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

-----------

மேற்குவங்க மாநிலம் ஹவுராவில் ஒரு வீட்டில் ஏற்பட்ட தீ விபத்தில் 3 குழந்தைகள் உயிரிழந்தனர்.

-----------

சத்தீஸ்கட் மாநிலம் உருவான தினத்தை ஒட்டி நேற்று அம்மாநிலத்தில் மாநில அரசின் சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

-----------

உதகமண்டலத்திற்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதால் இன்றும், நாளையும் சிறப்பு மலைரயில் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

-----------

தெற்கு ரயில்வேயின் மதுரை கோட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில் ரயில் பாதை அருகே உள்ளாட்சி அமைப்புகள் கால்வாய் வெட்டுவது உள்ளிட்ட பல்வேறு பணிகளை மேற்கொள்ளும்போது உரிய முன் அனுமதி பெற வேண்டும் என்று ரயில்வே அறிவித்துள்ளது.

-----------

சென்னையில் வருங்கால வைப்பு நிதி ஓய்வூதியதாரர்கள் வீட்டில் இருந்தபடியே உயிர்வாழ் சான்றிதழ் சமர்ப்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அஞ்சல்துறை தெரிவித்துள்ளது.

-----------

நாகப்பட்டினம் - இலங்கை இடையே இயக்கப்படும் கப்பல் சேவை வரும் 8ஆம் தேதி முதல் வாரத்திற்கு 5 நாட்கள் இயக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

-----------

ஹைலோ ஓபன் பேட்மிட்டன் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு அரை இறுதியில் இந்தியாவின் மாளவிகா பன்சோட் இன்று டென்மார்க்கின் **Julie Davall**-ஐ எதிர்கொள்கிறார்.

ஜெர்மனியில் நடைபெறும் இப்போட்டியின் ஆடவர் பிரிவில் ஆயுஷ் ஷெட்டி – பிரான்சின் **Christo Popov**-ஐ எதிர்கொள்கிறார்.

---------------

இந்தியா – நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 3வது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்று தொடர்ந்து நடைபெற உள்ளது.

நேற்று ஆட்டநேர இறுதியில் இந்தியா, முதல் இன்னிங்சில் 4 விக்கெட் இழப்புக்கு 86 ரன் எடுத்திருந்தது.

ஷுப்மன் கில் 31 ரன்னுடனும், ரிஷப் பந்த் ஒரு ரன்னுடனும் களத்தில் உள்ளனர்.

முன்னதாக நியூசிலாந்து முதல் இன்னிங்சில் 235 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

-----------

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் கோவா அணி - பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

-------------

ப்ரோ கபடி லீக் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் உத்தரப்பிரதேச அணி – பட்னா அணியையும், மற்றொரு போட்டியில் பெங்களூரு அணி – தெலுகு அணியையும் எதிர்கொள்கின்றன.

**<<<<The End>>>>**